பக்கங்கள் 19 + 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 22 வெள்ளிக்கிழமை | 06.03.2026 | அதிர்வு 218

**அவசரகாலச் சட்டத்தால்**

## அடக்குமுறை நடந்திருந்தால் ஆதாரத்தை முன்வையுங்கள்

### எதிர்க்கட்சிக்குப் பிரதமர் சவால்



நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுலில் உள்ள நிலையில், அதன் மூலம் ஏதேனும் அடக்குமுறைகள் இடம்பெற்றிருந் 05▸

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# யாழ்ப்பாணத்தில் பெரும் சோகம்

# பாலைதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழா பயணத்தில் படகு கவிழ்ந்து இருவர் மரணம்!

## குருநகர் கடற்பரப்பில் அதிர்ச்சி

## ★ 12 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழாவுக்குப் பக்திப் பரவசத்துடன் சென்ற பக்தர்களின் வாழ்வில் கடலலை பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. குருநகர் பகுதியில் இருந்து பக்தர்களுடன் 05▸





## யாழ். படகு விபத்து:

# அவசர விசாரணைக்கு அமைச்சர் உத்தரவு!

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கடற்படை விபத்துக்கான முழுமையான காரணங்களைக் கண்டறியும் வகையில், கடற்படையினர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவசர விசாரணைகளை முன்னெடுக்குமாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தத் துயரமான சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ள அமைச்சர், துயரத்தில் இருக்கும் அந்தக் குடும்பங்களுக்கு அரசின் சார்பில் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளார்.

விபத்து தொடர்பான விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ள அமைச்சர்,



பின்வரும் விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார்:

☆ விபத்துக்குள்ளான படகு பயணத்துக்கு உகந்த நிலையில் இருந்ததா?

☆ பயணிகளின் எண்ணிக்கை அனுமதிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டதாக அமைந்ததா?

☆ கடல் பயணத்தின்போது பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் முறையாகக் கடைப்பிடிக்கப்பட்டனவா?

இச்சம்பவம் தொடர்பாக யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், பொலிஸார் மற்றும் கடற்படையினருடன் அமைச்சர் அவசர கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார்.

கடலில் காணாமல் போனவர்களைத் தேடும் மற்றும் மீட்கும் பணிகளை எவ்வித தாமதமுமின்றி தீவிரப்படுத்துமாறும், அதற்காக அனைத்து வளங்களையும் பயன்படுத்துமாறும் அவர் அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை, காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் உடல்நிலை குறித்து வைத்தியசாலை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டறிந்த அமைச்சர், அவர்களுக்குத் தேவையான சிகிச்சைகளை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.



# ஈரானியக் கப்பலில் வந்த 208 பேரும் பத்திரமாக மீட்பு!

இலங்கையின் கடல் எல்லைக்கு அருகில் நங்கூரமிடப்பட்டிருந்த "ஐரிஸ் புசேஹெரின்" என்ற ஈரானியக் கப்பலில் பயணித்த 208 பணியாளர்களும் பாதுகாப்பாக கொழும்பு துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

உரிய இராஜதந்திர மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி அவர்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர் என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் புத்திக சம்பத் இன்று காலை ஊடகங்களிடம் தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ள ஈரானியப் பணியாளர்கள் அனைவரும், மேலதிக நடவடிக்கைகளுக்காக வெலிசர கடற்படைத் தளத்துக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். அங்கு அவர்களுக்குத் தேவையான மருத்துவப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும் என்றும் கடற்படை ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், குறித்த ஈரானியக் கப்பலை திருகோணமலை துறைமுகத்துக்குப் பாதுகாப்பாகக் கொண்டு செல்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தியப் பெருங்கடலில் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலினால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஈரானியப் போர்க்கப்பல் தொடர்பான தேடுதல் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன. இந்தத் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் இந்தியாவும் இணைந்து செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# எமது நிலம் எவருக்கும் போர்க்களம் அல்ல!

## நிலம், வான், கடல் எல்லைகளைப் பயன்படுத்த அனுமதி இல்லை என நீதி அமைச்சர் திட்டவட்டம்

இலங்கையின் நிலம், வான்பரப்பு அல்லது கடல் எல்லைகளை எந்தவொரு நாட்டுக்கும் சார்பாகவோ அல்லது மற்றுமொரு தரப்புக்குத் தீங்கு விளைவிப்பதற்கோ பயன்படுத்த ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார சபையில் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடிய வேளையில் உரையாற்றிய அவர், நாட்டின் வெளிவிவகாரக் கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் குறித்துப் பின்வருமாறு விளக்கமளித்தார்.

“எமது அரசு பதவியேற்றபோது, இவர்களுக்குச் சர்வதேச உறவுகளைக் கையாளத் தெரியாது என்றும், ஒரு பெட்டிக்கடையைக் கூட நடத்தத் தகுதியற்றவர்கள் என்றும் விமர்சித்தார்கள். சர்வதேச நாணய நிதியம் நாட்டை விட்டு வெளியேறிவிடும் எனக் கூறினார்கள். ஆனால், இன்று எமது ஜனாதிபதியின் இராஜதந்திரத்தையும், சர்வதேச சமூகம் எமது அரசின் மீது வைத்துள்ள நம்பிக்கையையும் கண்டு அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

ஈரான் – அமெரிக்கா மோதல் போன்ற சர்வதேசப் பிரச்சினைகள் முழு உலகையும் பாதிக்கின்றன. உலகில் எங்கு போர் நடந்தாலும் பாதிப்பு மனித உயிர்களுக்குத்தான். அதனால்தான் எமது ஜனாதிபதியும் வெளிவிவகார அமைச்சரும் எப்போதும் உலக அமைதிக்காகக் குரல் கொடுத்து வருகின்றனர்.

இலங்கை ஒரு சிறிய நாடாக இருந்தாலும், எமது அரசின் தன்னம்பிக்கையும் மனச்சாட்சியும் மிகப்பெரியது. சர்வதேச சட்டங்கள் மற்றும் சாசனங்களுக்கு உட்பட்டு நாம் எப்போதும் நடுநிலையான நாடாகவே செயற்படுவோம். பிற நாடுகளின் மோதல்களுக்காக எமது வளங்களைப் பயன்படுத்த இடமளிக்க மாட்டோம்.

மனிதாபிமானத்தை முன்னிறுத்தி, எந்தவொரு தரப்புக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நடுநிலையான வெளியுறவுக் கொள்கையைத் தொடர்ந் தும் முன்னெடுப்போம்.” – என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

# அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கையில் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஊடுருவியதா?

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி



நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு, தேசிய பாதுகாப்பு உச்சக்கட்டத்தில் இருப்பதாகக் கூறப்படும் நிலையில், இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்துக்குள் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று நுழைந்ததா என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றம் இன்று சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியபோது, நாட்டின் கடல்சார் பாதுகாப்பு குறித்து அவர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“இலங்கையின் நிலப்பகுதியிலிருந்து 40 கடல் மைல்களுக்கு அப்பால், எமது பிரத்தியேக பொருளாதார வலயத்துக்குள் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று வந்திருந்தது உங்களுக்குத் தெரியாதா? “ஐரிஸ் டென்னா” எனப்படும் “மௌட்ஜ் ரக” போர்க்கப்பல் மீது, நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து “மார்க் 48“ ரக ஏவுகணை ஏவப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தேசிய பாதுகாப்பு பலமாக இருப்பதாகக் கூறும் அரசிடம், 40 கடல் மைல் தொலைவில் ஒரு நீர்மூழ்கிக் கப்பல் வருவதைக் கண்டறியும் தொழில்நுட்பம் இல்லையா? எம்மிடம் மேற்பரப்பு ரேடார், சோனோபாய்ஸ், நீருக்கடியிலான சோனார் வலையமைப்புகள் அல்லது செயற்கைக்கோள் கண்காணிப்பு வசதிகள் இல்லையா?

கடலில் 208 பேர் காப்பாற்றப்பட்டமை பாராட்டுக்குரியது என்றாலும், அதற்கு முன்னதாக 130 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை கவலைக்குரியது. சம்பந்தப்பட்ட போர்க்கப்பல் இலங்கையின் 12 கடல் மைல் எல்லைக்குள் இருந்திருந்தால், அந்த 130 உயிர்களையும் காப்பாற்றியிருக்க முடியும்

அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கும் சூழலில் இவ்வாறான ஊடுருவல்கள் நடப்பது, நாட்டின் தேசிய பாதுகாப்பு எந்த நிலையில் உள்ளது என்பதைக் காட்டுகின்றது.” – என்றார்.

# மக்கள் குரலை ஒடுக்கவே அவசரகாலச் சட்டம் நீடிப்பு!

## நாடாளுமன்றத்தில் அலவத்துவல எம்.பி. காட்டம்



அரசுக்கு எதிராக எழும் மக்களின் போராட்டக் குரலை நசுக்கும் உள் நோக்கத்துடனேயே அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல தெரிவித்தார்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடியது. இதன்போது உரையாற்றிய அவர், அரசின் இந்த நடவடிக்கைக்குத் தனது கடும் கண்டனத்தைப் பதிவு செய்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்குப் பின்னணியில் மக்களின் அடிப்படை உரிமைகளை முடக்கும் அடக்குமுறை நோக்கமே காணப்படுகின்றது. மக்களின் உண்மையான கோரிக்கைகளைச் செவிமடுப்பதற்குப் பதிலாக, அவற்றை ஒடுக்குவதற்கே அரசு இச்சட்டத்தைப் பயன்படுத்துகின்றது.

தற்போது இச்சட்டத்தை நீடிக்க வேண்டிய எவ்விதத் தேவைப்பாடும் நாட்டில் இல்லை. இது தொடர்பாகப் பிரதி அமைச்சரால் முன்வைக்கப்பட்ட காரணங்கள் எவையும் ஏற்றுக் கொள்ளத்தக்கவை அல்ல.

அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வந்த மக்கள் விடுதலை முன்னணியினர், தற்போது எரிபொருள் வரிசையைக் கட்டுப்படுத்தவும் போதைப்பொருள் வியாபாரத்தை ஒழிக்கவும் இச்சட்டம் அவசியம் என்பது போலப் பேசுவது வியப்பளிக்கின்றது.

மக்களுக்கு முறையான சேவைகளை வழங்க அவசரகாலச் சட்டம் அவசியம் இல்லை. அரசின் மீதான மக்கள் எதிர்ப்பைத் திசைதிருப்பவே இச்சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது.

மக்களின் ஜனநாயக ரீதியிலான குரலை ஒடுக்குவதற்காக அரசு எடுத்துள்ள இந்த முடிவை நாம் முற்றாக எதிர்க்கின்றோம்.” – என்றார்.

### அவசரகாலச் சட்டம்:

# மக்கள் உரிமைகளை நசுக்க அல்ல! தேசத்தைப் பாதுகாக்கவே இச்சட்டம்!!

## பாதுகாப்பு அமைச்சு உறுதி



நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், சவாலான பொருளாதாரச் சூழலில் இருந்து மக்களைப் பாதுகாக்கவும் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்காகவே அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்புப் பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் ஓய்வுபெற்ற அருண ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றம் இன்று சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியபோது உரையாற்றிய அவர், அரசு இச்சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தவில்லை என்பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல், பொருளாதார வங்குரோத்து நிலை மற்றும் மக்களின் வாழ்வாதார வீழ்ச்சி ஆகியவற்றைக் கொண்ட ஒரு இக்கட்டான சூழலிலேயே நாம் நாட்டைப் பொறுப்பேற்றோம். ஊழல் நிறைந்த நிர்வாகத்தை மாற்றி, மக்களின் வாழ்வை மேம்படுத்துவதே எமது இலக்காகும்.

நாட்டின் முன்னேற்றத்துக்குச் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்படுவது அத்தியாவசியமானது. அதற்கான சூழலை உருவாக்குவதே அரசின் நோக்கம்.

தற்போது நிலவும் ‘டித்வா’ சூறாவளியின் பாதிப்புகள் மற்றும் மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழல் என்பன நாட்டின் பொருளாதாரத்திலும் பாதுகாப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இவ்வாறான நெருக்கடி நிலைகளைக் கட்டுப்படுத்தி, மக்களைப் பாதுகாப்பான பாதையில் இட்டுச் செல்லவே அவசரகாலச் சட்ட நீடிப்பு அவசியமாகின்றது.

இச்சட்டம் மக்களின் உரிமைகளை நசுக்கப் பயன்படுத்தப்படவில்லை. மாறாக, தேசத்தின் ஸ்திரத்தன்மையைப் பேணவே இது நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலச் சவால்களை முறியடித்து, நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கு இந்தத் தீர்மானம் மிகவும் பொருத்தமானது.” – என்றார்.













## பாலைதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புறப்பட்ட படகு, நடுக் கடலில் எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளாகித் தலை கீழாகக் கவிழ்ந்ததில் இருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இன்று காலை பாலைதீவு ஆலயத் திருவிழாவுக்காக குருநகர் கடற்பரப்பிலிருந்து விசைப்படை படகு ஒன்று புறப்பட்டது. கரை தாண்டிச் சிறிது நேரத்திலேயே படகு நிலைதடுமாறி கடலில் மூழ்கியது. படகில் இருந்த சிறுவர்கள், முதியவர்கள் என அனைவரும் அலறிக் கூச்சலிட்டபடி கடலினுள் விழுந்தனர்.

தகவலறிந்ததும் அப்பகுதி மீனவர்களும் கடற்படையினரும் உடனடியாக மீட்புப் பணியில் குதித்தனர். எனினும், கடலில் மூழ்கியவர்களில் இருவர் சடலங்களாக மீட்கப்பட்டமை பெரும் சோகத்தை ஏற் படுத்தியுள்ளது.

**இந்த விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டவர்கள்:-**

☆ ஸ்டீபன் பிரான்சிஸ் (வயது 57) – நாவற்குழி.

☆ எம். ஜோசப் (வயது 80) – பழைய பூங்கா சாலை, குருநகர்.

கடலில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்ட 12 பேர் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவிலும், சாதாரண விடுதிகளிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**தீவிர சிகிச்சைப் பிரிவில்:-**

பருத்தித்துறையைச் சேர்ந்த பரமேஸ்வரி செபஸ்தியாம்பிள்ளை (வயது 79) மற்றும் உரும்பிராயைச் சேர்ந்த உதயகுமாரி (வயது 63) ஆகிய இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் அவர்களுக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

**சாதாரண சிகிச்சைப் பிரிவில்:-**

இளவாலை, மாதகல், மன்னார் – பேசாலை, விசுவமடு மற்றும் கம்பஹா ஆகிய இடங்களைச் சேர்ந்த 10 பேர் தொடர்ந்தும் சாதாரண சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 12 வயது சிறுவன் ஒருவனும் அடங்குகிறான் என்பது குறிப்பிடத்தக்கது.

**தேடுதல் நடவடிக்கை**

படகில் பயணித்தோரின் எண்ணிக்கை தெரியவராத நிலையில், கடலில் காணாமல்போனோர் இருக்கலாம் என்ற ரீதியில் சுழியோடிகள் மூலம் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விபத்து அதிக சுமை காரணமாக ஏற்பட்டதா அல்லது இயந்திரக் கோளாறு காரணமா என்பது குறித்து யாழ்ப்பாணம் பொலிஸாரும் கடற்படையினரும் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். திருவிழா உற்சாகத்தில் இருந்த குரு நகர் மற்றும் யாழ். குடாநாடு முழுவதும் இந்தச் சம்பவத்தால் தற்போது சோகத்தில் மூழ்கியுள்ளது.

---

## அடக்குமுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தால் அதனை ஆதாரங்களுடன் நிரூபிக்குமாறு பிரதமர் ஹறிணி அமரசூரிய எதிர்க்கட்சியினருக்குச் சவால் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடிய வேளையில், எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் மேலும் தெரிவிக்கையில்,

“அடக்குமுறை, அடக்குமுறை என்று வெறும் வார்த்தைகளை மட்டும் கூறிக்கொண்டிருக்காமல், உண்மையில் எங்கே அடக்குமுறை நடந்தது என்பதை எங்களிடம் முன்வையுங்கள். கடந்த மூன்று மாத காலப்பகுதிக்குள் இந்தச் சட்டத்தின் கீழ் யாராவது கைது செய்யப்பட்டார்களா? அல்லது யாராவது அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டார்களா? அத்தகைய சம்பவங்கள் இருந்தால் அவற்றை விவரியுங்கள்.

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய நாம் எதிர்க்கட்சியில் இருந்தபோது அவசரகாலச் சட்டத்தை எதிர்த்தோம். ஆனால், அந்தச் சந்தர்ப்பங்களில் அச்சட்டத்தின் மூலம் அடக்குமுறைகள் திட்டவட்டமாக அரங்கேற்றப்பட்டன. அதற்கான சாட்சிகளும் உதாரணங்களும் எங்களிடம் இருந்தன. அதன் அடிப்படையிலேயே நாம் அன்று எதிர்த்தோம்.

அவசரகாலச் சட்ட நீடிப்பானது ஜனநாயகத்துக்கு விடுக்கப்படும் சவால் என எதிர்க்கட்சியினர் முன்வைக்கும் தொடர்ச்சியான குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இல்லை.

அரசு சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தவே நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஆதாரங்களின்றி அரசியல் இலாபத்துக்காக அடக்குமுறை எனும் சொல்லைப் பயன்படுத்த வேண்டாம்.” – என்றார்.

# கணேமுல்ல சஞ்சீவ படுகொலை வழக்கு: 'கெஹெல்பத்தர பத்மே'வை மேலும் 90 நாள்கள் தடுத்து வைக்க விசாரிக்க நீதிமன்றம் அனுமதி!



கொழும்பு நீதிவான் நீதிமன்றக் கூண்டுக்குள் வைத்து கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் முக்கிய சந்தேகநபர்களுக்கு ஆதர வளித்ததாகக் கருதப்படும் "கெஹெல் பத்தர பத்மே" என்பவரை மேலும் 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய கொழும்பு மேலதிக நீதிவான் அசங்க எஸ். போதரகம நேற்று வியாழக் கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக் களத்துக்கு அனுமதி வழங்கினார்.

பாதாள உலகக் குழு உறுப்பினர் எனக் கருதப்படும் கெஹெல்பத்தர பத்மே, ஏற்கனவே 90 நாள்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட் படுத்தப்பட்டிருந்தார். இந்நிலையில், கடந்த பெப்ரவரி 26 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் மேலும் 90 நாள்களுக்கு அவரைத் தடுத்து வைத்து விசாரிக்க பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்துள்ளது என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்வைத்த சமர்ப்பணங்களை ஏற்று நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கணேமுல்ல சஞ்சீவ படுகொலைக்கு உதவியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு, தற்போது விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள கம்பஹா மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் நிரோஷன் உதித் உதயசாந்தவுக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்ட போதே இந்த மேலதிக விசா ரணை அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப் பிக்கப்பட்டது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர் பான விசாரணைகள் இன்னும் நிறை வடையவில்லை என்றும், சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெ டுக்க வேண்டியுள்ளதால் தடுத்து வைப் பதற்கான அனுமதியை வழங்குமாறும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திடம் கோரியிருந்தது. இதனைக் கருத்திற்கொண்ட நீதிமன்றம், சந்தேகநபரைத் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதியளித்தது.



# 'கெசல்வத்த தினுஷ' தப்பிச் செல்லப் போலிக் கடவுச்சீட்டு: உதவிய சந்தேகநபர் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில்!

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பாதாள உலகக் குழு உறுப்பினர் 'கெசல்வத்த தினுஷ' வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்வதற்காகப் போலி கடவுச்சீட்டைத் தயாரித்துக் கொடுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரை, எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு மேலதிக நீதிவான் அசங்க எஸ்.போதரகம நேற்று உத்தரவிட்டார்.

கொழும்பு – கெசல்பத்த பொலிஸ ாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட இஷார பஹல கலகே என்பவரே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொலை, கப்பம் கோருதல், கொள்ளை மற்றும் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருத்தல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான "கெசல்வத்த தினுஷ" என்றழைக்கப் படும் ஹேவாபேடிகே தினுஷ சதுரங்க, சுமார் மூன்று ஆண்டுகளாக டுபாயில் தலைமறைவாக இருந்த நிலையில், அண்மையில் இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்டார்.

"கெசல்வத்த தினுஷ" கைது செய் யப்பட்ட போது, அவரிடம் 'இஷார பஹல கலகே' என்ற பெயரிலான போலிக் கடவுச்சீட்டு இருந்தமை கண்டறியப் பட்டது. அந்தக் கடவுச்சீட்டில் உள்ள தகவல்களின் அடிப்படையிலேயே தற்போது விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள சந்தேகநபர் கைது செய்யப் பட்டார் என்று பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால், சந்தேகநபரை விளக்க மறியலில் வைக்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்தனர். அத்துடன், பிரதான சந்தேகநபரான "கெசல்வத்த தினுஷ" தற்போது கொம்பனித்தெரு பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார் என்றும், அவருக்கு எதிராக நிலுவையிலுள்ள ஏனைய குற்றவியல் வழக்குகள் குறித்தும் பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

விடயங்களை ஆராய்ந்த நீதிவான், சந்தேகநபரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதுடன், அன்றைய தினம் விசாரணைகளின் முன்னேற்ற அறிக் கையைச் சமர்ப்பிக்குமாறும் பொலிஸ ாருக்குப் பணிப்புரை விடுத்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பங்கீட்டு முறைமை

மத்திய கிழக்குக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமை காரணமாக இலங்கையில் எரிபொருள் விநியோகத்தில் பெரும் நெருக்கடி காணப்படுகிறது. மக்கள் தொடர்ந்து எரிபொருள் நிலைய இடங்களில் வரிசையில் கூடி நின்று எரிபொருளைக் கொள்வனவு செய்து குவிக்கின்றார்கள்.

இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு அரசு எடுத்துள்ள தீர்க்கமான நடவடிக்கை பலன் அளிப்பதாகத் தெரியவில்லை. தொடர்ந்து இந்த விவகாரம் மேலும் மேலும் மோசமடைந்து வருகின்றது.

உதாரணத்துக்குயாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை இரவு முதல் எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக நீண்ட வரிசைகளில் மக்கள் காத்திருந்து பெற்றோலை பெற்றுச் செல்கின்றனர். கடந்த சனிக்கிழமை முதல் செவ்வாய்க்கிழமை வரையில் 7 இலட்சத்து 45 ஆயிரம் லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

வழமையாக யாழ்ப்பாணத்தில் 4 நாள்களில் சுமார் 5 இலட்சம் லீற்றர் பெற்றோல் கொள்வனவு செய்யப்படும் நிலையில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் என்ற பயத்தின் காரணமாக தேவைக்கு அதிகமான நுகர்வு செய்யப்படுவதனால் , 4 நாள்களில் சுமார் இரண்டரை இலட்சம் லீற்றர் பெற்றோல் மேலதிகமாக நுகரப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதனன்று யாழ்ப்பாணத்திற்கு, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 36 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக விநியோகிக்க 3 இலட்சத்து 10 ஆயிரத்து 200 லீற்றர் பெற்றோல் கொலன்னாவையில் இருந்து பவுஸர்களில் கொண்டு வரப்பட்டு விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அப்படியிருந்தும் வரிசை குறையவில்லை. தொடர்ந்து நீளுகின்றது.

இதுதான் இலங்கை முழுவதிலும் உள்ள நிலைமை.

மக்கள் எரிபொருளுக்கு முண்டியடித்தால், தேவையான அளவு கையிருப்பில் இருக்கும் நிலையில், தொடர்ந்து எரிபொருளை வார்த்துத் தள்ளுவோம், ஏதோ ஒரு கட்டத்தில் மக்கள் மனநிறைவோடு வாங்கித் தள்ளிச் சேமிப்பதை நிறுத்துவார்கள் என்று அரசு கனவு காண்கின்றது.

மத்திய கிழக்கில் போர் நிலைமை நீடிக்கும் வரை எரிபொருள் தட்டுப்பாடு அல்லது பற்றாக்குறை பெரும் நெருக்கடியாக வரும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் நிலையாக உள்ளது. அது ஒரு வகையில் மறுக்க முடியாத உண்மையை கூட.

ஆகையால் என்ன கட்டுப்பாடு விதித்தாலும் மக்கள் இயன்ற அளவு எரிபொருளை வாங்கித் தத்தமிடங்களில் சேமிப்பதற்கு பின்நிற்க மாட்டார்கள். ஆகையினால் தேவையான அளவு எரிபொருளை அள்ளி வீசி வழங்கி, விநியோகித்து, நெருக்கடியை சமாளிக்கலாம் என்று திட்டத்தை அரசு கைவிட்டு, முன்னர் இத்தகைய நெருக்கடி வரும்போது பின்பற்றிய பங்கீட்டு முறைமையை மீண்டும் கொண்டு வருவதுதான் உசிதமானது.

பங்கீட்டு முறைமை தொடருமானால், அதற்கு கீழ் தமக்கான எரிபொருள் விநியோகம் உறுதி செய்யப்படும் என்று கருதி அதன் அடிப்படையில் எரிபொருளை வாங்கிக் குவிக்கும் வேலையை மக்கள் நிறுத்துவார்கள்.

ஆகவே வீம்பு அரசியல் செய்வதை நிறுத்தி, யதார்த்தபூர்வமாகச் சிந்தித்து, சரியான முடிவை எடுத்து, செயல்பட அரசு முன் வர வேண்டும்.

# நல்லூர் கந்தனிலிருந்து வெடுக்குநாறிக்கு சென்றது புனித திருத்தல தரிசன யாத்திரை!







**(த.சுபேசன்)**

மாசிமகத்தை முன்னிட்டு முன்னிட்டு நல்லூர் கந்தனில் இருந்து வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வர் ஆலயம்வரை புனித திருத்தல தரிசன யாத்திரை இடம்பெற்றுள்ளது.

இந்த யாத்திரையானது இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபை யின் தேசிய ஆணையாளரும் உலக இந்துத் திருக்கோவில் கள் அமைப்பின் யாழ். மாவட்டத் தலைவருமான கலாநிதி வைத் திலிங்கம் மோகனதாஸ் தலை மையில் சிவகுரு ஆதீனமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமி களின் ஆசீருடன் இடம்பெற்றது.

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து கடந்த 2 ஆம் திகதி திங்கள்கிழமை திருத்தல யாத்திரை ஆரம்பமாகி வரலாற்று சிறப்புமிக்க வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் சென்று சிவனடியார்களால் விஷேட பூஜை, மகேஸ்வர பூஜை, பொங்கல், பஜனை வழிபாடுகள் சிவ நட னநிகழ்வுகள் முன்னெ டுக்கப்பட்டன. தொடர்ந்து வவு னியா வேப்பங்குளம் பத்திரகாளி, முத்துமாரி அம்பாளின் கொடி யிறக்க நிகழ்விலும் கலந்து கொண்டுதிருத்தல யாத்திரையை நிறைவு செய்தனர்.




# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் அருளுரையும் உதவிகள் வழங்கலும்









சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகன தாஸ் சுவாமிகளின் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக, “பஞ்ச அட்சரம் ” என்னும் ஆன்மீக அருளுரையை ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி ப.சிவனொளிபாதம் (சைவ மங்கையர் கழகம்) நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் உதவித் திட்டமாக, நெட்டிலிப்பாய் கோயில் வீதி, கோண்டாவில் பகுதியில் அமைந்துள்ள, மூத்த பிரஜைகள் குழு முதியோர் சங்கத்தினரால் வருடாந்தம் கொண்டாடப்படும் முதியோர்கள் கௌரவிப்பு ஆண்டு விழா நிகழ்வுக்காக 35 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது. இன்று வெள்ளிக்கிழமை நிகழ்வுகள் இடம்பெற்றன.

# மட்டக்களப்பில் 18 பேருக்கு டெங்கு நோய் வீடுகள், காணிகளை துப்புரவு செய்ய அறிவுறுத்து





**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவிலுள்ள கொக்குவில் மற்றும் கோட்டமுனை பிரதேசங்களில் 18 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு ஆளாகியுள்ளனர். சிக்கன் குனியா நோய்த் தாக்கத்துக்கும் ஆளாகி வருகின்றனர். எனவே பொதுமக்கள் வீடுகள் மற்றும் தமது காணி, வெற்று காணிகளை துப்பரவு செய்யுமாறு மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பணிப்பாளர் வைத்தியர் இளைதம்பி உதயகுமார் கேரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு நகர்பகுதியில் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளான கொக்குவில் மற்றும் கோட்டமுனை பிரதேசங்களில் உள்ள வீடுகளை சோதனையிடும் நடவடிக்கை நேற்று இடம்பெற்றது. மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் பொது சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் மாநகரசபை, கிராம உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட குழுவினர் இணைந்து மேற்கொண்டனர்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பணிப்பாளர் வைத்தியர் உதயகுமார் கருத்து தெரிவிக்கையில்,

மாவட்டத்தில் சில வாரங்களுக்கு முன்னர் தொடர்ச்சியாக மழை பெய்த காரணமாக காரணமாக மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்துள்ளது.

இதற்கமைய கொக்குவில், மற்றும் கோட்டமுனை பிரதேசங்களில் ஒவ்வொரு நாளும் 3 பேர் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகி வருகின்றனர். கொக்குவில் பிரதேசத்தில் 12 டெங்கு நோயாளர்களும் கோட்டமுனை பகுதியில் 6 பேர் டெங்கு நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

தாக்கத்துக்கு உள்ளானவர்களின் பகுதிகளில் டெங்கு நுளம்பு குடம்பிகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனால் நோயைக் கட்டுபாட்டுக்குள் கொண்டுவரக் கூடியதாக இருக்கின்றது. இருந்தாலும் பொது மக்கள் தங்களது வீடுகள், காணிகள் மற்றும் பராமரிப்பு இல்லாமல் உள்ள வெற்றுக் காணிகள் மற்றும் தொடர்ந்து பூட்டியுள்ள வீடுகளின் உரிமையாளர்கள் உடனடியாக டெங்கு நுளம்பு பரவும் இடங்களை துப்பரவு செய்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அவ்வாறு ஒத்துழைப்பதன் மூலம் டெங்கு நுளம்பை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.– என்றார்.



# ஆள்கடத்தல் வியாபாரம் தொடர்பாக அரச உத்தியோகத்தருக்கு விழிப்புணர்வு

ஆள்கடத்தல் வியாபாரம் தொடர்பிலான விழிப்புணர்வு நிகழ்வு திருகோணமலை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் மற்றும் தேசிய மனித ஆட்கடத்தல் தொடர்பிலான பணிக் குழுவின் ஏற்பாட்டிலும் திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன் தலைமையிலும் இது இடம்பெற்றது.

மனித ஆள்கடத்தல் வியாபாரத்தைத் தடுக்கும் நோக்கில் குறித்த பணிக்குழு ஊடாக பல்வேறு விழிப்புணர்வுகள் இடம்பெற்றன. சர்வதேச புலம்பெயர்தலுக்கான அமைப்பின் பிரதிநிதிகள் நிகழ் நிலை ஊடாக இணைந்து மனித ஆள்கடத்தல் தொடர்பாகத் தெளிவூட்டினர்.

மனித ஆள்கடத்தலுக்கு எதிரான செயற்றிட்டம் ஊடாகக் குறித்த நிகழ்வு இடம்பெற்று வருகிறது. வெளிநாடுகளுக்கு தொழிலுக்காக புலம்பெயர்தலின் போது சட்ட ரீதியாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் ஊடாக பதிவு செய்து செல்லுதல், ஏமாற்று நடவடிக்கைகளில் இருந்து பணிப்பெண்களைப் பாதுகாத்துக் கொள்ளல் தொடர்பிலும் விரிவான கலந்துரையாடல் இடம் பெற்றது.

மனித வியாபாரமானது பல்வேறு வடிவங்களில் இடம்பெற்று வருகிறது. இதனால் பல பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் தெரிவிக்கப்படுகிறது. இதனை பிரதேச மட்டத்துக்கு கொண்டு செல்லுதல் தொடர்பிலும் பேசப்பட்டது.

மேலும் இணைய வழி மோசடி ஊடாகவும் பலர் ஏமாற்றப்பட்டு வருகின்றனர். இவ்வாறான ஏமாற்றங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதில் நாடாளுமன்ற விவகார அமைச்சின் மேலதிக செயலாளரும், தேசிய மனித ஆள்கடத்தல் எதிர்ப்பு பணி குழுவின் செயலாளருமான சட்டத்தரணி எச்.எச்.என்.பிரியங்கணி ஹேவாரத்ண, பணிக் குழுவின் உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், துறைசார் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# மட்டு. கரவெட்டி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் பிரமாண்டமான யாகம்!









( வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு கரவெட்டி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் பிரமாண்டமான சிவபூஜை மற்றும் யாகம் நடைபெற்றது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபகர் சிவசங்கர் ஜீ தலைமையில் இந்த மகா யாகம் நடைபெற்றது.

சர்வ வல்லமை வாய்ந்த 210 சித்தர்கள் வேள்வியுடன் தொடங்கி, ஒரு லட்சம் பஞ்சாட்சர ஜெபத்துடன் லிங்கேஸ்வரருக்கு பிரமாண்டமான அபிஷேகம் இடம்பெற்றது.

சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், உப தலைவர் மனோகரன் ஆகியோரின் நெறிப்படுத்தலில், நமசிவாய மகேஸ்வரன் சுவாமிகளின் ஆலோசனையின்படி இந்த விசேட யாகம் இடம்பெற்றது.

# களுதாவளையில் 30 நாள்களில் 37 திடீர் மரணங்கள்; பிரதேச சபை, சுகாதார துறை இணைந்து ஆய்வு!



( வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மாவட்ட களுதாவளை கிராமத்தில் 30 நாள்களில் 37 மரணங்கள் சம்பவித்திருக்கின்றன. இதனால் அங்கு ஒருவித பரபரப்பு நிலவுகிறது.

இதனையடுத்து அங்குள்ள பிரதேச சபை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் இணைந்து ஆய்வில் ஈடுபட்டுவருகின்றனர்.

களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் களுதாவளை பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் கடந்த தை மாத காலத்தில் 37 திடீர் மரணங்கள் ஏற்பட்டுள்ளன என்று கிடைத்த சமூக ஊடக தகவல்களைத் தொடர்ந்து அதன் உண்மைத் தன்மையையும் இறப்புகளுக்கான காரணங்களையும் கண்டறிந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நோக்கத்துடன் இந்த ஆய்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது.

திடீர் மரணங்கள் சம்பவித்த 37 வீடுகளுக்கும் சென்று வினாக்கொத்து வழங்கி தகவல்கள் பெறப்பட்டன. எதனால் மரணம் இடம்பெற்றது என்ற காரணமும் அறியப்பட்டுள்ளது.

இந்த சுகாதார கள ஆய்வானது மண்முனை தென்எருவில் பற்று பிரதேச சபையின் ஒத்துழைப்புடன் இடம் பெற்றது.

இக் கள ஆய்வில் மண்முனை தென்எருவில் பற்று பிரதேசசபை தவிசாளர் மே.வினோராஜ் மற்றும் உத்தியோகத்தர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், பொது சுகாதார மருத்துவ மாதுக்கள், களுதாவளை கிராம சேவை உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைந்து பங்களிப்பு வழங்கியிருந்தனர்.

# ஒழுக்க விழுமியக் கல்வி மூலமாகவே சிறந்த தலைமுறையை உருவாக்கலாம்

## காரைதீவில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அனிருத்தனன்

( வி.ரி.சகாதேவராஜா)

ஒழுக்க விழுமியக் கல்விக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலமாகவே, எதிர்காலத்தில் சிறந்த ஒழுக்கம் சார்ந்த தலைமுறையை உருவாக்க முடியும்.

இவ்வாறு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அனிருத்தனன் காரைதீவில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட இந்து அறநெறிப்பாடசலை ஆசிரியர்களுக்கான அறநெறிப்பாடசாலை பாடத்திட்டம், அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அனிருத்தனன் தலைமையில் இடம் பெற்றது .

இந்நிகழ்வுக்கு இந்து சமயகலாசார அலுலல்கள் திணைக்களத்தின் அறநெறிக்கு பொறுப்பான உதவி பணிப்பாளர் திருமதி அனந்தா அம்பிகைபாகன் கலந்து கொண்டு அறநெறிப்பாடசாலையின் நோக்கம் எதிர்கால நடவடிக்கைகள், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களின் பொறுப்புக்கள் கடமைகள் ஆக்கத்திறன் போட்டிகள், குருபூசை நிகழ்வுகள், புதிய மாணவர்களை அறநெறிக்கல்விக்கு இணைத்தல், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளித்தார்.

சிறப்பு அதிதியாகக் காரைதீவ



பிரதேச செயலக உதவிப்பணிப்பாளர் பே. பிரணவரூபன் கலந்து கொண்டார்.

அங்கு பணிப்பாளர் அனிருத்தனன் மேலும் உரையாற்றுகையில்,

நவீனத்துவம் என்ற போர்வையில் இன்று பொதுவாகப் பிள்ளைகள், ஆசிரியர்களுக்கு, பெற்றோர்களுக்கு மதிப்பளிக்கிற விதம் குறைந்து வருகிறது.

இதற்கு அடிப்படைக் காரணம் ஒழுக்கம் சார்ந்த கல்வி முறையாக ஊட்டப்படாமையே.

எனவே ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் ஒழுக்கம் சார்ந்த அறநெறிக் கல்விக்கு உதவ வேண்டும். அது சிறப்பான முறையில் நடைபெற அல்லது இடையூறு இல்லாமல் இருப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் .

அப்போதுதான் ஒழுக்கம், அன்பு, கருணை, காருண்யம் விட்டுக்கொடுப்பு என்ற உயரிய பண்புகள் பிள்ளைகளிடம் உருவாகும்.

அதேபோல் அந்த பிள்ளைகள் ஆரோக்கியம் உள்ள பிள்ளைகளாக உருவாக்குவதற்கும் காரணமாக இவ் ஒழுக்கம் சார்ந்த கல்வி இருக்கும்.– என்றார்.

அறநெறிப் பாடசாலை புதிய பாடத்திட்டம் தொடர்பான விளக்கத்தை அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி நிகழ்த்தினார்.

அறநெறிப் பாடசாலைகளை நடத்தும் போது பின்பற்ற வேண்டிய கற்பித்தல் நுட்பங்கள், விளையாட்டுக்கள், தொடர்பான விடயங்களை சைவபண்டிதர், சைவப்புலவர் வளவாளர் யோ. கஜேந்திரா நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வுக்கு அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில், திருக்கோவில், ஆலையடிவேம்பு, அட்டாளச்சேனை, நிந்தவூர், காரைதீவு, லாகுகல, கல்முனை வடக்கு, நாவிதன்வெளி, ஆகிய பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த 348 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். அம்பாறை மாவட்ட இந்துக்கலாசார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அறநெறிப் பாடசாலைகளுக்கான பாடநூல்கள், பாடசாலை பதிவேடு, ஆசிரியர் குறிப்பேடு, பஞ்சாங்க நாட்குறிப்பு, பண்ணிசைக்கான சல்லாரி, கதாபிரசங்க நிகழ்வுக்கான சப்பிலாக்கட்டை என்பன வழங்கி வைக்கப்பட்டன.

ஏற்பாடுகளை திணைக்களத்தின் சார்பில் மாவட்ட இந்துகலாசார உததியோகத்தர் கு.ஜெயராஜி மேற்கொண்டார்.





# காரைதீவு வைத்தியசாலையில் சிரமதானம்

( வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச சபையின் ஏற்பாட்டில், காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் பாரிய சிரமதானம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி மருத்துவர் அஜந்தா சுரேஸ் விடுத்த வேண்டுகோளையேற்று பிரதேச சபையின் தவிசாளர் சு.பாஸ்கரன் இந்த நடவடிக்கையை தமது ஊழியர்கள் சகிதம் மேற்கொண்டார்.

அதனால் வைத்தியசாலையின் உள் வெளி சூழல்கள் சுத்தமாக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டி ஞாயிற்றுக்கிழமை

(வடமராட்சி நிருபர்)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.



அதிபர் திருமதி கிருஷ்ணலதா குலசங்கர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மோகனசுந்தரம் தெய்வேந்திராவும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் திருமதி அன்பரசி கருணாகரனும் கலந்து கொள்வர். பரிசில்களை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் ஆசிரியர் திருமதி சிவரஞ்சினி தெய்வேந்திரா வழங்கி வைப்பார்.






# பெரியகல்லாறு மாணவருக்க பாதணிகள் வழங்கிவைப்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

உதவும் பொற்கரங்கள் அமைப்பால் "கல்வி மேம்பாட்டுக்காகக் கரம் கொடுப்போம்" திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு பெரியகல்லாறு புனித அருளானந்தர் வித்தியாலய தரம் 01 மாணவர்களுக்கான பாதணிகள் இன்று வெள்ளிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

உதவும் பொற் கரங்கள் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சமூக சேவையாளர் கனடா வி.கணபதிப்பிள்ளையின் நிதியுதவியில் இந்தப் பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வித்தியாலய அதிபர் வி.புவிவாணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கே.மதிசீலன், ஒய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்களான வித்தகர் வி.ரி.சகாதேவராஜா, க. வரதராஜன், தாயக இணைப்பாளர் என்.சௌவியதாசன் ஆகியோர் கலந்து கொண்டர்.



# மன்னாரில் போதியளவு எரிபொருள் கையிருப்பில் நெல்லை குறைந்த விலைக்கு விற்க வேண்டாம்!

## அரச அதிபர் க.கனகேஸ்வரன் விவசாயிகளுக்குத் தெரிவிப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் போதிய அளவு எரி பொருள்கள் கையிருப்பில் உள்ளமையால் விவசாயிகள் அறுவடை செய்யும் நெல்லை இடைத் தரகர்களிடம் குறைந்த விலைக்கு விற்க வேண்டாம் எனவும், உலர வைக்கும் இயந்திரங்களை பயன்படுத்தி நெல்லைப் பாதுகாக்குமாறு அரச அதிபர் க.கனகேஸ்வரன் விவசாயிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வளைகுடா பகுதியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாக எரிபொருள்களுக்கான நெருக்கடி நிலைமை காணப்பட்டது. இந்த நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன்



அடிக்கடி தொடர்பில் இருந்து மன்னார் மாவட்டத்துக்குத் தேவையான எரி பொருளை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

தற்போது நெல் அறுவடை காலம் என்பதால், அறுவடை இயந்திரங்களுக்கு தேவையான எரிபொருளை தடையின்றி வழங்குமாறு எரிபொருள் நிலைய உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாட்டைக் காரணம் காட்டி, அறுவடை இயந்திரங்களுக்கான கட்டணத்தை உயர்த்த வேண்டாம்.

விவசாயிகள் இடைத்தரகர்களிடம் குறைந்த விலைக்கு நெல்லை விற்க வேண்டாம். உலர வைக்கும் இயந்திரங்களை பயன்படுத்தி நெல்லைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

தனியார் மற்றும் அரசு பஸ்களுக்குத் தேவையான எரிபொருள் தாராளமாக வழங்கப்படுவதால், பொதுமக்கள் எவ்வித இடையூறுமின்றிப் பயணங்களை மேற்கொள்ள முடியும்.

கடற்றொழிலுக்கு தேவையான மண்ணெண்ணெய் விநியோகம் தடையின்றி நடைபெறுகிறது. மீனவர்கள் தங்களுக்கு அருகிலுள்ள நிலையங்களில் எரி பொருளைப் பெற்றுக் கொள்ளலாம்.

எரிபொருள் விநியோகம் தொடர்பாக ஏதேனும் சிரமங்கள் அல்லது புகார்கள் இருந்தால், மாவட்டச் செயலகம் மற்றும் விவசாயிகள் கமலநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும், மீனவர்கள் கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் அலுவலகத்திலும் முறைப்பாடு தெரிவிக்க முடியும்.- என்றார்.





# சம்மாந்துறையில் சுகாதாரமற்ற உணவு கடை உரிமையாளருக்கு அபராதம் விதிப்பு

**(நூருல் ஹுதா உமர்)**

சம்மாந்துறை கல்லரிச்சல் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் உணவு வழங்கிய கடை உரிமையாளருக்கு எதிராக 13 மாதங்களுக்கு மேலாக நீடித்த சட்டப் போராட்டத்தின் பின்னர், இன்று சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் தீர்ப்பு வழங்கப்பட்டது. 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த 2025 பெப்ரவரி 02 ஆம் திகதி, சம்மாந்துறை கல்லரிச்சல் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட சங்க ஒன்று கூடலில் வழங்கப்பட்ட இரவு விருந்தில் பரிமாறப்பட்ட பொரித்த கோழியில் புழுக்கள் இருந்தமை சங்க உறுப்பினர்களால் கண்டறியப்பட்டது. இதையடுத்து கடை உரிமையாளருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தின் பின்னர், சம்பவம் தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குழுவுக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவத்துக்குப் பின்னர் கடையை மூடிவிட்டு தலைமறைவான வெளி ஊர் கடை உரிமையாளர், சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கின் விசாரணைகளுக்கு மூன்று முறை ஆஜராகாமல் தவிர்த்து வந்துள்ளார். பின்னர் நீதிமன்ற பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

நீதிமன்றத்தில் தன்னை நிரபராதி என்று வாதாட முயன்ற போதிலும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வழங்கிய வலுவான சாட்சியங்கள் மற்றும் சட்ட வாதங்களின் அடிப்படையில் அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து குற்றவாளியின் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு, அவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து வழக்கு நிறைவு செய்யப்பட்டது.

இந்த வழக்கின் மூலம் பொது மக்களின் சுகாதாரத்துடன் விளையாடுபவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்பதையும், சுகாதாரமான உணவு வழங்குதல் அனைவரின் பொறுப்பாகும் என்பதையும் பொதுச் சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.



# சாரணத் தலைவர்களுக்கான தீப்பாசறை நெறி மீரிகமவில்!

**(திகாமடுல்ல நிருபர்)**

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாரணர் தலைவர்களுக்கான மூன்று நாள் தீப்பாசறை பாட நெறி மீரிகம லீதிசநாயக்க பயிற்சி நிலையத்தில் இன்று ஆரம்பமாகியது.

சாரணர் சங்கத்தின் தேசிய பயிற்சி ஆணையாளர் கேணல் பத்மலால் பெரேராவின் வழிகாட்டலின் கீழ் பாசறை குழுவின் தலைவர் சுரத் எதுராப்போல தலைமையில் இன்று முதல் மூன்று நாள்களுக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம சாரண ஆணையாளர் சட்டத்தரணி மனோஜ் நாணயக்கார பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சகல சாரணர் மாவட்டங்களிருந்தும் 48 சாரணத் தலைவர்கள் பங்கு பற்றினர். பயிற்சி நெறியைச் சாரணர் தலைமை அலுவலக தேசிய பயிற்சிக் குழுவினர் வளவாளராக கலந்து கொண்டு வழங் கினர்













### மன்னார் சாந்திபுரம் பகுதி வீடு ஒன்றில்

# திருடப்பட்ட நகை, பணத்துடன் நான்கு பெண்கள் கைதாகினர்!

### மன்னார் பொலிஸார் துரித நடவடிக்கை

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட் )**

மன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாந்திபுரம் 50 வீட்டுத்திட்ட பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த புதன் கிழமை இரவு இடம்பெற்ற திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான பெண் ஒருவர் உள்ளடங்களாக நான்கு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து திருடப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பெருந்தொகை பணம் ஆகிய வற்றையும் மன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

மன்னார் சாந்திபுரம் 50 வீட்டுத்திட்டப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த புதன்கிழமை இரவு பாரிய திருட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளமை குறித்து குறித்த வீட்டின் உரிமையாளர் நேற்று வியாழக்கிழமை மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.



இதன்போது குறித்த வீட்டில் தாலிக் கொடி, சங்கிலி, காப்பு உள்ளடங்களாக 15 பவுண் தங்க நகைகளும், 4 லட்சத்து 35 ஆயிரம் ரூபா பணமும் காணாமல் போயுள்ளது என்று மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இந்த முறைப்பாடுகளுக்கு அமைவாக மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யூ.என்.கெட்டியாராச்சியின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் பொலிஸ் நிலைய குற்ற தடுப்பு பிரிவு பொலிஸ் பரிசோதகர் பத்தே விதான, பொலிஸ் சாஜன் சிவ ராஜா(53207), பொலிஸ் கான்டபிள்களான சஞ்ஜீவ ராஜ்(37747), கருணாரத்ன(10522), பெண் பொலிஸ் கொஸ்தபில்களான ரஜித்தா(10137), ஓவியா(12439) ஆகியோர் இணைந்து முன்னெடுத்த விசேட தேடுதல் நடவடிக்கைகளின் போது பிரதான சந்தேக நபரான பெண் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது ஏனைய சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து திருடப்பட்ட சுமார் 56 லட்சம் ரூபா மதிப்புள்ள 15 பவுண் தங்க நகைகள் மற்றும் பணம் என்பன முழுமையாக மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட குறித்த நான்கு பெண்களும் தற்போது மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருவதோடு விசாரணைகளின் பின்னர் மீட்கப்பட்ட நகைகள், பணம் என்பவற்றை கைது செய்யப்பட்ட நபர்களுடன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த மன்னார் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

# நாட்டு துப்பாக்கி வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயம்!

**(பா.சதீசன் )**

சட்டவிரோதமாக உடமையில் வைத்திருந்த நாட்டுத் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் இளைஞர் ஒருவர் படு காயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் இன்று பிற்பகல் மல்லாவி ஒட்டறுத்தகுளம் – வடகாடு பகுதியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் ஒட்டறுத்தகுளம் வடகாடு பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஆறுமுகம் சகிதன் என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

காயமடைந்த இளைஞர் உடனடியாக மல்லாவி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பின்லாந்து ஜனாதிபதியுடன் பிரதமர் மோடி சந்திப்பு

## போர்களுக்கு விரைவில் முடிவுகாண வலியுறுத்தல்

மேற்கு ஆசியா மற்றும் உக்ரைன் போர்களுக்கு விரைவில் முடிவு காணப்பட வேண்டும் என்றும் இராணுவ மோதல்கள் மூலம் எந்தவொரு பிரச்சனைக்கும் தீர்வு காண முடியாது எனவும் பின்லாந்து ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது, பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு நான்கு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பின்லாந்து ஜனாதிபதி அலெக்சாண்டர் ஸ்டப்புடன், பிரதமர் மோடி நேற்று விரிவான பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தினர்.

அதன் பின்னர் பிரதமர் வெளியிட்ட ஊடக அறிக்கையில்.

“இந்தியாவும் பின்லாந்தும் சட்டத்தின் ஆட்சி, பேச்சுவார்த்தை மற்றும் இராஜதந்திர வழிமுறைகளில் நம்பிக்கை கொண்டுள்ளன. இராணுவ மோதல்கள் மூலமாக மட்டுமே எந்தவொரு சிக்கலுக்கும் தீர்வு கண்டுவிட முடியாது என்பதில் இரு நாடுகளும் ஒரு மித்த கருத்தைக் கொண்டுள்ளன.

உக்ரைன் விவகாரமாக இருந்தாலும் சரி, மேற்கு ஆசியாவாக இருந்தாலும் சரி, போர்களை விரைவாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், அமைதிக்கான அனைத்து முயற்சிகளுக்கும் நாங்கள் தொடர்ந்து ஆதரவளிப்போம். இரு நாடுகளுக்கும் இடையிலான டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் நிலைத் தன்மை தொடர்பான உறவுகளில் இருவரும் இணைந்து செயல்படுவது என இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

செயற்கை நுண்ணறிவு முதல் 6 ஜி தொலைத்தொடர்பு வரை, தூய்மையான எரிசக்தி முதல் குவாண்டம் கம்ப்யூட்டிங் வரை, இந்தக் கூட்டாண்மை இரு நாடுகளிடையே புதிய வேகத்தையும் ஆற்றலையும் வழங்கும்.

மேலும், இந்தியா - ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இந்தியாவிற்கும் பின்லாந்திற்கும் இடையிலான வர்த்தகம், முதலீடு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.



# சுகோய் - 30 போர் விமானம் அசாமில் விபத்தில் சிக்கியது

## விமானி மாயம்

இந்திய விமானப்படையின் சுகோய்-30 போர் விமானம் அசாமில் விபத்தில் சிக்கியுள்ளது.

இந்திய விமானப்படைக்குச் சொந்தமான சுகோய்-30 எம்.கே.ஐ. ரக போர் விமானம் குவாஹாத்தியிலுள்ள விமானப் படைத் தளத்தில் இருந்து நேற்று மாலை புறப்பட்டது.

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் அதனுடனான தொடர்பு அறுந்து போனது. இதையடுத்து விமானத்தைத் தேடும் பணிகளை இந்திய விமானப் படை அதிகாரிகள் தொடங்கினர்.

இந்நிலையில் அந்த விமானம் அசாம் மாநில கார்பி அங்கிலாங் அருகிலுள்ள சோக்கி ஹோலா என்ற இடத்தில் விழுந்து நொருங்கியுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து சம்பவ இடத்தில் மீட்புப் பணியில் விமானப்படை வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். இதனிடையே போர் விமானத்தை இயக்கிய விமானி மாயமாகியுள்ளார் என்று குவாஹாத்தியிலுள்ள பாதுகாப்புத் துறையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். அவரைத் தேடும் பணிகளும் நடைபெற்று வருகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.




# ஈரான் போர்க் கப்பல் மூழ்கியபோது மீட்பில் ஈடுபட்ட இந்திய கடற்படை

ஈரான் போர்க் கப்பல் மூழ்கிய போது இந்திய கடற்படை மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளது.

இதுதொடர்பில் இந்திய கடற்படை நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

கடந்த 4 ஆம் திகதி அதிகாலை ஈரான் போர்க் கப்பல் ஐ.ஆர்.ஐ.எஸ். டேனாவில் இருந்து அவசர உதவி கோரி கொழும்பு கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துக்கு தகவல் அனுப்பப்பட்டது.

இலங்கையின் காலே பகுதியில் இருந்து 20 கடல் மைல் தொலைவில் ஈரான் போர்க்கப்பல் கடலில் மூழ்கியது. இது இலங்கை கடல் எல்லைக்கு உட்பட்ட பகுதி ஆகும். இந்திய கடற்படைக்கு தகவல் கிடைத்ததும் உடனடியாக மீட்புப் பணியில் களமிறங்கினோம். ஐ.என்.எஸ். தரங்கிணி கப்பல் சம்பவ பகுதிக்கு அனுப்பப்பட்டது. கொச்சியில் இருந்து ஐ.என்.எஸ். இக்சாக் கப்பலும் சம்பவ பகுதிக்கு சென்றது.

இலங்கை கடற்படையோடு இணைந்து இந்திய கடற்படையும் மீட்புப் பணியில் ஈடுபட்டது. இந்திய கடற்படையின் கண்காணிப்பு விமானம் சம்பவ பகுதிக்கு விரைந்து சென்று உயிர் காக்கும் உடைகளை வீசியது. இலங்கையோடு இணைந்து தொடர்ந்து மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகிறோம்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது .




# அமெரிக்காவின் எண்ணெய் கப்பல் மீது தாக்குதல் நடத்தியது ஈரான் இராணுவம்

ஈரான் போர்க் கப்பலை அமெரிக்க நீர்மூழ்கி கப்பல் தாக்கியதற்கு பதிலடியாக, வளைகுடா பகுதியில் அமெரிக்காவின் எண்ணெய் கப்பல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஈரான் கூறியுள்ளது.

ஈரான் கடற்படையின் 17 போர் கப்பல்களை அழித்துவிட்டதாக அமெரிக்கா கூறியது.

இந்தியாவில் கூட்டுப் பயிற்சியை முடித்து விட்டு ஈரான் திரும்பிய ஐ.ஆர்.ஐ.எஸ். டேனா என்ற போர்க் கப்பலை, இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமெரிக்க கடற்படையின் நீர்மூழ்கி கப்பல் மார்க் -48 என்ற சக்தி வாய்ந்த டார்பிடோ குண்டு மூலம் நேற்று முன்தினம் தகர்த்தது. இதில் 87 வீரர்கள் உயிரிழந்தனர். 32 வீரர்களை இலங்கை கடற்படை மீட்டது. மாயமான 60 இற்கும் மேற்பட்டோரை தேடும் பணியில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி,

"ஈரான் கடல் பகுதியில் இருந்து 2,000 மைல்களுக்கு அப்பால் ஈரான் கப்பல் மீது தாக்குதல் நடத்தி அமெரிக்கா அராஜகத்தில் ஈடுபட்டுள்ளது. இந்திய கடற்படை நிகழ்ச்சியில் பங்கேற்றுவிட்டு திரும்பிய டேனா போர்க் கப்பல் மீது எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படாமல் தாக்குதல் நடத்தியுள்ளது. இதற்காக அமெரிக்கா மிகுந்த வருத்தம் அடையும்." என்றார்.

இலங்கை அருகே ஈரான் போர்க் கப்பல் தாக்கப்பட்ட சில மணி நேரத்தில், வடக்கு பெர்சியன் வளைகுடாவில் அமெரிக்க எண்ணெய் டேங்கர் கப்பல் மீது ஈரான் இராணுவம் ஏவுகணை தாக்குல் நடத்தியதாகவும், இதில் அந்தக் கப்பல் தீப்பிடித்து எரிவதாகவும் ஈரான் கூறியுள்ளது. இது இன்னும் உறுதி செய்யப்படவில்லை.



# மத்திய கிழக்கில் தொடரும் போர் பதற்றம்: ட்ரம்பை கொல்ல ஈரான் மதகுரு அழைப்பு

மத்திய கிழக்கு நாடுகளில் 7 ஆவது நாளாக போர் நீடித்து வரும் நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை கொல்ல வேண்டும் என ஈரான் மதகுரு ஒருவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி ஈரான் மீது வான்வழி தாக்குதலை தொடங்கின. இதில், ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி உட்பட சுமார் 50 உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து, இஸ்ரேல் மற்றும் அமெரிக்க படைத்தலங்கள் அமைந்துள்ள வளைகுடா நாடுகள் மீது ஈரான் தொடர்ந்து வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு இஸ்ரேல் மற்றும் அமெரிக்க படைகள் தக்க பதிலடி கொடுத்து வருகின்றன.

இந்தப் போர் இன்று 07 ஆவது நாளை எட்டியது. நேற்று அதிகாலையில் இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதனால் லட்சக்கணக்கான மக்கள் குண்டு துளைக்காத புகலிடங்களில் தஞ்சமடைந்தனர். இதுவரை ஈரானில் 1,230 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சூழலில், ஈரானின் மூத்த ஷியா மதகுருக்களில் ஒருவரான அயத்துல்லா அப்துல்லா ஜவாதி அமோலி ஈரானிய அரசு தொலைக்காட்சியில் பேசும்போது,

“நாம் இப்போது ஒரு பெரிய சோதனையின் விளிம்பில் இருக்கிறோம். இந்த ஒற்றுமையை நாம் முழுமையாகப் பாதுகாக்க வேண்டும். யூதர்களின் (இஸ்ரேலியர்கள்) ரத்தம் சிந்தப்பட வேண்டும், ட்ரம்பின் ரத்தம் சிந்தப்பட வேண்டும்.

அடக்குமுறை செய்யும் அமெரிக்காவை எதிர்த்துப் போராடுங்கள், அவனது (ட்ரம்பின்) ரத்தம் என் தோள்களில் உள்ளது என காலத்தின் இமாம் கூறுகிறார்” என்று தெரிவித்துள்ளார்.

ஷியா இஸ்லாமிய மதகுருமார்களில் ‘அயத்துல்லா’ என்பது மிக உயர்ந்த பதவிகளில் ஒன்றாகும். ஈரானில் இத்தகைய மூத்த மதகுருக்கள் பலர் உள்ளனர். அவர்களின் மத மற்றும் அரசியல் ரீதியிலான கருத்துகள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும்.

எனவே, இந்த அறிக்கை மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அமெரிக்க செனட் ஒப்புதல் இதற்கிடையே ஈரானுக்கு எதிரான வான்வழித் தாக்குதல்களை நிறுத்துவதற்கான தீர்மானம் அமெரிக்க செனட்டில் தோற்கடிக்கப்பட்டது (53-47 வாக்குகள்). இதன் மூலம் தாக்குதலைத் தொடர ட்ரம்புக்கு அதிகாரம் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.











கனடா முரசு

வெள்ளிக்கிழமை | 06/03/2026

கனடாவில் காணாமல் போன 21 வயது பெண் சடலமாக மீட்பு



02




# மத்திய கிழக்கில் இடம்பெறும் போரின்போது கூட்டாளி நாடுகளுடன் இணைந்து நிற்போம்

## கனடா பிரதமர் அறிவிப்பு

ஈரான் மீதான இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் தாக்குதல், அதற்கு ஈரான் கொடுத்துவரும் பதிலடியைத் தொடர்ந்து மத்திய கிழக்கு பகுதியில் பதற்றம் நிலவிவரும் நிலையில், போரில் எங்கள் கூட்டாளி நாடுகளுடன் இணைந்து நிற்போம் என கனடா பிரதமர் கூறியுள்ளமை கவனத்தை ஈர்த்துள்ளது.

மத்திய கிழக்கில் போர்ச்சூழல் மும்முரமாகிவரும் நிலையில், போரில் எமது நாட்டின் இராணுவம் பங்கேற்கும் நிலை ஏற்படலாம் என கனேடிய பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார். 02

# கனடாவில் 6 ஆண்டுகளாக தேடப்பட்ட ஒருவர் கைது



கனடாவில் கடந்த ஆறு ஆண்டுகளாக தேடப்பட்டு வந்த குற்றவாளி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என கியுபெக் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஸ்டீபென் பியுமொன்ட் என்ற நபர் அல்பேர்ட்டா மாகாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் என வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டது.

மேற்படி நபர் 2015 ஆம் ஆண்டு கியுபெக் சிட்டி பகுதியில் அதிகளவு கொக்கைன் விநியோகித்த போதைப் பொருள் வலையமைப்பில் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் தடுத்து வைக்கும் நிபந்தனைகளில் தளர்வு வழங்கப்பட்ட போதும், விடுதலை நிபந்தனைகளை அவர் பின்பற்றவில்லை.

அதன் பின்னர் 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து அவர் தலைமறைவாக இருந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஆறு ஆண்டுகளாக நடைபெற்ற தேடுதல் நடவடிக்கைகளுக்குப் பின்னர் அவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட அவர் மாகாண சிறையில் அடைக்கப்பட்டுள்ளதுடன், பின்னர் சிறைக் காவலில் ஒப்படைக்கப்படுவார்எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கைது நடவடிக்கை மாகாண பொலிஸார் உள்ளிட்ட பல பாதுகாப்பு அமைப்புகளின் இணைந்த நடவடிக்கையால் மேற்கொள்ளப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சொக்லட் டெசர்ட் குறித்து அதிகாரிகள் எச்சரிக்கை




கனடாவில் Costco கடைகளில் விற்பனை செய்யப்பட்ட ஒரு வகை சொக்லட் டெசர்ட் தயாரிப்பு குறித்து அதிகாரிகள் எச்சரிக்கை வெளியிட்டுள்ளனர்.

தயாரிப்பில் குறிப்பிடப்படாத ஒவ்வாமை ஏற்படுத்தக்கூடிய பொருள்கள் இருக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டதால் அந்த தயாரிப்பு மீள பெறப்பட்டுள்ளன. இதன்படி Mellow Food நிறுவனம் தயாரித்த "Delici Dubai Style Chocolate Dessert" என்ற லேயர்டு சாக்லேட் மூஸ் தயாரிப்பின் சில தொகுதிகள் மீள பெறப்படுகின்றன.

இந்த தயாரிப்பில் லேபிளில் குறிப்பிடப்படாமல் காசியூ அல்லது மக்கடாமியா பருப்பு இருக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வகை பொருள்களுக்கு ஒவ்வாமை உள்ளவர்களுக்கு இது கடுமையான, உயிருக்கு ஆபத்தான ஒவ்வாமை தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த தயாரிப்பு பொதுவாக பிஸ்தா, பெல்ஜியன் பால் சொக்லட் மற்றும் கடாயிப் ஆகியவற்றுடன் தயாரிக்கப்பட்டதாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது.

பாதிக்கப்பட்ட பொருள்கள் 76 கிராம் கொண்ட 6 கப் கொண்ட தொகுப்பாக விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அவற்றின் UPC எண் 812190020825 என்றும், Costco பொருள் எண் 1990644 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தயாரிப்புகள் ஜனவரி முதல் பிப்ரவரி மாதங்களுக்குள் கனடாவில் உள்ள Costco கடைகளில் விற்பனை செய்யப்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது. காசியூ அல்லது மக்கடாமியா பருப்பிற்கு ஒவ்வாமை உள்ளவர்கள் இந்த தயாரிப்பை சாப்பிட வேண்டாம் என்றும், வாங்கியவர்கள் அதை அருகிலுள்ள Costco கடைக்கு திருப்பி வழங்கி பணத்தை மீண்டும் பெறலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# கனடாவில் காணாமல் போன 21 வயது பெண் சடலமாக மீட்பு

கனடாவின் Bridgewater, Nova Scotia பகுதியில் காணாமல் போனார் என அறிவிக்கப்பட்ட 21 வயது இளம் பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போனவர் Finn McDormand என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சுமார் 4.30 மணியளவில் காணாமல் போனார் என அறிவிக்கப்பட்டது.

பொலிஸாரின் தகவலின்படி, Gow's Home Hardware என்ற கடையில் பெற்றோருடன் இருந்தபோது, திடீரென அங்கிருந்து ஓடிச் சென்றுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவப் பிரச்சினைகள் காரண



மாக அவர் நலன் குறித்து குடும்பத்தினரும் பொலிஸாரும் கவலை தெரிவித்திருந்தனர்.

பின்னர் Bridgewater Police Service K9 பிரிவு மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது, Forest Hill Road அருகிலுள்ள தனிமையான காட்டுப் பகுதியில் கடந்த புதன்கிழமை அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில், அந்த மரணம் சந்தேகத்திற்கிடமானதாக கருதப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணை தொடர்வதால் மரணத்திற்கான காரணம் குறித்து தற்போது கூடுதல் தகவல்களை வழங்க முடியாது எனவும் பொலிஸார் கூறியுள்ளனர். மேலும் அந்தப் பகுதியை பொதுமக்கள் தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடா பிரதமர் மார்க் கார்னி அவுஸ்திரேலியாவுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், அவர், அவுஸ்திரேலிய பிரதமரான அந்தோனி அல்பானீஸுடன் இணைந்து ஊடகவியலாளர்களை சந்தித்தார்.

அப்போது கனடா பிரதமர் கார்னியிடம், ஈரான் போரில் கனடா ஈடுபடும் சூழ்நிலை உள்ளதா என கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த பிரதமர் கார்னி, இந்தக் கேள்வி ஒரு கருதுகோளாக இருக்கும் பட்சத்தில், போரில் பங்கேற்பதை ஒருபோதும் வெளிப்படையாக நிராகரிக்க முடியாது என்றார்.

மேலும், நாங்கள் எங்கள் கூட்டாளிகளுக்கு ஆதரவாக நிற்போம் என்றும் எப்போதும் கனேடியர்களைப் பாதுகாப்போம் என்றும் பிரதமர் கார்னி கூறினார்.

இதில் ஒரு முக்கிய விடயம் என்னவென்றால், கனடா பிரதமர் கார்னி அவுஸ்திரேலியா முதலான நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளதே, அமெரிக்காவை சார்ந்திருப்பதை குறைக்கவேண்டும் என வலியுறுத்துவதற்காகத்தான் என குறிப்பிடப்படுகிறது.



# மொன்றியல் நகரின் தெற்கு கரையில் பாலம் இடிந்து போக்குவரத்து நிறுத்தம்

கனடாவின் மொன்றியல் நகரின் தெற்கு கரையில் உள்ள ஒரு பாலத்தின் பகுதி திடீரென இடிந்து விழுந்ததால் சில மணி நேரங்களுக்கு முழுமையாக போக்குவரத்து நிறுத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் Sauvagine Bridge பாலத்தில் ஏற்பட்டுள்ளது. பாலத்தின் ஒரு பகுதி இடிந்து பெரிய துளை உருவாகியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பாலம் அமைந்துள்ள சீட்டங்கேய் நகரின் மேயர் எரிக் எல்லார்ட் இந்த சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று உறுதிப்படுத்தினார்.

மேலும் அவர் சமூக ஊடகங்களில் பகிர்ந்த புகைப்படங்களில் பாலத்தின் ஒரு வழித்தடத்தின் நடுப்பகுதியில் பெரிய துளையும் வெளிப்பட்ட இரும்புக் கம்பிகளும் காணப்பட்டன. இந்த பாலம் Châteauguay River ஆற்றை கடந்து செல்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பாலத்தின் பராமரிப்பு மற்றும் ஆய்வு பொறுப்பு கியுபெக் போக்குவரத்து அமைச்சினை சாரும் சேர்ந்தது என மேயர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் பாலத்தை முழுமையாக மீளமைக்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இதற்கிடையில், பாலத்தின் மேற்கு நோக்கிச் செல்லும் பாதை காலவரையற்ற முறையில் மூடப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, பாதுகாப்பானதாக மதிப்பீடு செய்யப்பட்டதால் கிழக்கு நோக்கிச் செல்லும் பாதையில் இரு திசைகளுக்கும் தலா ஒரு வழித்தடம் திறக்கப்பட்டுள்ளது.

1963 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த கொன்கிரீட் பாலம் கடைசியாக 2024 செப்டம்பர் 5 ஆம் திகதி ஆய்வு செய்யப்பட்டதாகவும், அடுத்த ஆய்வு இந்த ஆண்டில் நடத்த திட்டமிடப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பாலம் வழியாக தினமும் சராசரியாக சுமார் 6,000 வாகனங்கள் பயணிக்கின்றன. அவற்றில் சுமார் 5 சதவீதமானவை கனரக லொறிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

